<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 239/2019**

2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய ராஜசேகரன் **PW3.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 22.01.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ராஜசேகரன் | | |
| Father /Husband Name | : | முத்துகிருஷ்ணன் | Court | : |
| Village | : | மேலப்பெரும்பள்ளம் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 62/2026 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 3வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது பொன்னாங்கண்ணி தெரு, மேலப்பெரும்பள்ளத்தில் வசித்து வருகிறேன். பொறையாரை சேர்ந்த ராஜகோபாலின் மனைவி மீனாட்சி என்பவர் எனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தார். 22.07.1996 ல் மீனாட்சி என்பவர் அவரது வளரப்பு மகன் விஸ்வநாதன் மற்றும் அவரது கொழுந்தனார் மகன் சிதம்பரநாதன் ஆகியோர் பெயருக்கு உயில் ஆவணம் எழுதி வைத்தார். அந்த உயில் ஆவணத்தில் எனது முன்னிலையில் கையொப்பம் செய்தார். நான் மேற்படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் வாசாஆ 2 ஆன ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **வாசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**